Judicial Form No.53

(See Rule 43)

DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**DVA 4/2019**

**2023-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 20-ம் தேதி வெள்ளிக்கிழமை குற்றம் முறையிடுபவரின் ம.சா. 1 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி) திரு.சரவணன் இளநிலை உதவியாளர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ம.சா. | - | 1 | தொழில் | - | வீட்டு குடித்தனம் |
| பெயர் | - | சோபியா | வட்டம் | - | வால்பாறை |
| க/பெ | - | மணிகண்டன் | சமயம் | - | இந்து |
| கிராமம் | - | வால்பாறை | வயது | - | 31 |
| சாதி | - | - | | | |

**<u>20.10.2023</u>**

1. எனது தரப்பில் ஆணையுறுதிப் பத்திரம் தாக்கல் செய்துள்ளேன். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். அதிலுள்ள விவரங்கள் எனக்கு தெரியும்.

| ஆ. எண். | ஆவணம் | ஆவண தன்மை | ஆவண குறியீடு |
|---|---|---|---|
| 1. | 4-09-2019 தேதியிட்ட மனுதாரரர் மற்றும் 1-ம் எதிரிமனுதாரரர் திருமண அழைப்பிதழ் அசல் | அசல் | ம.சா.ஆ.1 |
| 2. | 4-09-2019 தேதியிட்ட திருமண பதிவு விண்ணப்பம் நகல் எதிர்மனுதாரரர் தரப்பு ஆட்சேபனையுடன் குறியீடு செய்யப்படுகிறது. | நகல் | ம.சா.ஆ.2 |
| 3. | திருமண போட்டோ | - | ம.சா.ஆ.3 |
| 4. | மனுதாரரின் ஆதார் அட்டை அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது. | நகல் | ம.சா.ஆ.4 |
| 5. | மனுதாரரின் வாக்காளர் அடையாள அட்டை | நகல் | ம.சா.ஆ.5 |

எதிர் மனுதாரர்களின் தரப்பில் குறுக்குவிசாரணை

1. நான் பயோடெக் கே,எஸ்,ஜி கல்லூரியில் படித்துள்ளேன். 2008-ல் கல்லூரியில் சேர்ந்து 2011-ல் முடித்தேன். என்னுடைய தகப்பனார் தனியார் கம்பெனியில் ஓட்டுனராக உள்ளார். என் உடன் பிறந்தவர் ஒரு அண்ணன் அவருடைய பெயர்சாலமன். அதை தவிர அவருக்கு வேறு பெயர் எதுவும் இல்லை. நான் இந்து சோழிய வெள்ளாளர் வகுப்பை சார்ந்தவர்.

2. நான் படித்த பள்ளி மற்றும் கல்லூரி சான்றிதழ்களை பார்த்தால் நான் இந்து வெள்ளாளர் வகுப்பை சார்ந்தவர் என்பது தெரியுமா என்றால் சரிதான். நான் கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர் என்று சொன்னால் அது தவறா என்றால் தவறு. 4-09-2019-ல் நடைபெற்ற திருமணம் இந்து முறைப்படி நடைபெற்றது என்றால் ஆமாம்.

3. நான் கிறிஸ்துவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு மதம் மாற்றம் ஆகியுள்ளேனா என்றால் நாங்கள் மதம் மாற்றம் ஆகியுள்ளோம். எந்த தேதி எந்த வருடத்தில் அவ்வாறு மதம் மாற்றம் ஆனேன் என்றால் நான் திருமணம் நடந்த சமயத்தில் மதம் மாற்றம் ஆனேன். தேதி, வருடம் எனக்கு தெரியவில்லை.

4. மதம் மாற்றம் யார் முன்னிலையில் எங்கு வைத்து கிறிஸ்துவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு மாறினேன் என்றால் மதம் மாற்றம் செய்து வைக்க எங்களுக்கு யாரும் வரவில்லை சில காரணங்களால் நாங்களாகவே கோவிலுக்கு போக ஆரம்பித்தோம்.

5. எங்களுக்கு இந்து கோயிலுக்கு போக விருப்பம் இருந்தது அதனால் போனேன் என்றால் சரிதான். நான் கிறிஸ்துவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு மாறுவதற்கான முறையான மாற்றம் எதுவும் செய்யப்படவில்லை என்றால் என்னோட மனசு மாற விரும்பியதால் என்னுடைய மன விருப்பத்திற்கு மாறி நான் கோயிலுக்கு போனேன்.

6. நான் கிறிஸ்துவ மதத்தில் இருந்து இந்து மதத்திற்கு மாறவே இல்லை என்றால் என் மனசால் மாறிவிட்டேன். இந்து மதத்திற்கு மாறியதாக பொய்யாக சொல்லுகிறேனா என்றால் பொய் இல்லை நான் இந்து மதத்திற்கு மாறியது உண்மை.

7. நான் முறையாக மாறி இருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பேன் என்றால் நான் என் மனசால் மாறியதால் அதற்கான ஆதாரம் எதுவும் என்னிடம் இல்லை. என்னை பெண் பார்க்க ஜுன் 2019-ல் வந்தார்கள். தேதி ஞாபகம் இல்லை. பொள்ளாச்சியில் உள்ள பாலக்காடு ரோட்டில் உளள ஒரு சர்ச்சில் வைத்து பார்த்தோம். பார்த்த அன்றே திருமண உறுதி படுத்தல் செய்யப்பட்டு நிச்சயதார்த்தம் நடந்ததா என்றால் நடக்கவில்லை.

8. நிச்சயதார்த்தம் ஆனி மாதம் 2019-ல் நடந்தது. 21-08-2019 அன்று மைக்கேல்ராஜ் என்பவரின் வீட்டில் வைத்து பெண் பார்க்கும் படலம் நடந்தது என்றால் நடக்கவில்லை. அன்றைய தினமே திருமணத்தை உறுதி படுத்தும் நிச்சயதார்த்தம் நடந்தது என்றால் நடக்கவில்லை.

9. ம.சா.ஆ. 2-ல் உள்ள கையெழுத்து என்னுடைய அம்மாவின் கையெழுத்து என்றால் சரிதான். அதில் உள்ள விவரங்களை நான் தான் பூர்த்தி செய்தேன் என்றால் சரிதான். அதில் இந்து சோழிய வெள்ளாளர் என்று என் கைப்பட எழுதியுள்ளேன் என்றால் சரிதான்.

10. ம.சா.ஆ.2-ஐ கிராம நிர்வாக அலுவலர் வால்பாறை அவருடன் சென்று பதிவு செய்ய கேட்டேன் என்றால் சரிதான். அந்த சமயத்தில் 1-ம் எதிர்மனுதாரரும் என்னுடன் வந்திருந்தார் அவர்தான் பொள்ளாச்சியில் இருந்து படிவம் வாங்கிக்கொடுத்தார். அவர் சொல்ல சொல்ல அந்த விவரங்களை

நான் பூர்த்தி செய்தேன்.

11. எங்களுக்கு திருமணம் 04-09-2019-ல் நடந்தது. அது இந்து திருமண முறைப்படி அருள்மிகு பிரசன்ன விநாயகர் கோவிலில் நடந்தது என்றால் சரிதான். எங்கள் திருமணத்திற்கு நான் எங்கள் அண்ணன், என் அப்பா, அம்மா ஆகிய நான்கு பேர்கள் தான் வந்தார்கள் என்றால் இல்லை. சொந்தக்காரர்கள் சேர்த்து 10 பேர்கள் வந்தார்கள்.

12. திருமணம் நிச்சயம் செய்து 10, 20 நாட்களுக்குள் திருமணம் நடந்தது என்றால் இல்லை. ஆடி மாதம் முழுவதும் எங்களுக்கு கேப் இருந்தது ஆவணி மாதம் தான் நடந்தது. கல்யாணத்திற்கு மாப்பிள்ளை வீட்டார் எனக்கு என்னென்ன நகைகள் போட்டார்கள் என்றால் 1 1/2 பவுன் தாலி, 1 மோதிரம், 1 கம்மல் அவ்வளவுதான். மாப்பிள்ளை வீட்டார் எனக்கு 2 1/2 பவுனில் தாலி, 5 பவுனில் 2 செயின், 4 மோதிரம், 4 கம்மல், 1 பிரேஸ்லெட், ரூபாய் 25,000/- மதிப்புள்ள முகூர்த்த புடவை, ரூபாய் 15,000/- மதிப்புள்ள மாற்றல் புடவை, பிளவுஸ் மற்றும் இதர பொருட்கள் ரூபாய் 15,000/- மதிப்புள்ளது திருமணத்தன்று எனக்கு கொடுத்தார்களா என்றால் கொடுக்கவில்லை.

13. நான் கல்யாணத்திற்கு நகை வாங்கிய ரசீதுகளை எல்லாம் வைத்துள்ளேனா என்றால் வைத்துள்ளேன். அந்த ரசீதை பார்த்தால் என்னென்ன நகைகள், எவ்வளவு பவுன் போன்ற விபரங்கள் தெரியும் என்றால் சரிதான். அந்த ரசீது பில்லுகளை இந்த மனுவுடன் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

14. பணம் ரூ. 2 லட்சம் மற்றும் 5 பவுன் நகை மாப்பிள்ளைக்கு போட்டதாக வழக்கிற்காக ஜோடிக்கப்பட்டு மனுவில் சொல்லப்பட்டுள்ளது என்றால் மாப்பிள்ளைக்கு கொடுத்தது உண்மை. கல்யாணம் முடிந்து 10, 15 நாட்களிலேயே எனக்கு உடல் நிலை சுகமில்லாமல் ஆகிவிட்டது என்றால் நன்றாகத்தான் இருந்தேன். அந்த சமயத்தில் எனக்கு தைராய்டு பிரச்சனை இருந்ததால் கொஞ்சம் உடல் நிலை சுகமில்லாமல் இருந்தேன்.

15. தைராய்டு பிரச்சனையால் சுகமில்லாமல் இருந்ததை மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. 14-09-2019-ல் இரவு முழுவதும் வாந்தி எடுத்துக்கொண்டு இருந்தேன், அதனால் 15-09-2019 காலையில் 1 வது எதிர்மனுதாரர் என்னை அழைத்துக்கொண்டு அகாலியா மருத்துவமனைக்கு கூப்பிட்டு சென்றார் என்றால் இரவு முழுவதும் வாந்தி எடுக்கவில்லை ஆனால் 15-09-2019 ல் அவர் தைராய்டு செக் பன்னுவதற்காக கூப்பிட்டுச்சென்றது உண்மை.

16. அங்கு எனக்கு எல்லாவகையான மருத்துவ பரிசோதனை செய்தார்கள் என்றால் சரிதான் ரத்தபரிசோதனை செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த ரத்தப்பரிசோதனையில் நான் கர்ப்பம் தரித்ததாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் அந்த அறிக்கை இதுதானா என்றால் சரிதான். அந்த அகாலியா மருத்துவ அறிக்கை எ.சா.ஆ.1 ஆகும்.

17. எ.சா.1-ன் படி நான் கருவுற்றது தெரிந்ததால் மறுநாள் 1ம் எதிர்மனுதாரர் என்னை கே.எம். மருத்துவமனைக்கு அழைத்து சென்றார் என்றால் சரிதான். அங்கு என்னை அல்லி விஜயன் என்ற மகப்பேறு சிறப்பு மருத்துவர் என்னை பரிசோதனை செய்தார் என்றால் சரிதான்.

18. அங்கும் எனக்கும் எக்கோ ஸ்கேன் மற்றும் இதர பரிசோதனை செய்யப்பட்டது என்றால் சரிதான் ஆனால் அந்த ரிப்போட்டை நான் கண்ணால் பார்க்கவில்லை. அங்கு ஸ்கேன் பரிசோதனை செய்தது எனக்கு தெரியும் அந்த ரிப்போட்டை நான் பார்த்துள்ளேன் என்றால் அந்த ரிப்போட்டை

நான் பார்க்கவில்லை. அந்த ரிப்போட்டை எல்லாம் 1-ம் எதிர்மனுதாரர் வாங்கிவைத்துக்கொண்டார் என்றால் சரிதான்.

19. அந்த ரிப்போட்டில் உத்தேசமாக 19-05-2020-ல் குழுந்தை பிறந்துவிடும் என்று சொல்லப்பட்டுள்ளது என்றால் நான் ரிப்போட்டையே பார்க்கவில்லை. அந்த ரிப்போட் படி நான் 1-வது எதிர்மனுதாரரின் திருமணத்திற்கு முன்பே நான் கருவுற்று இருந்தேன் என்றால் உண்மை. எங்களுக்கு இவர் பூ வைத்து கல்யாணத்தை உறுதிபன்னினார். அதில் இருந்து என்னை பார்ப்பதற்காக வால்பாறைக்கு வந்திருக்கிறார். இவரும் இவருடன் இருந்த அக்கா என்பவரும் இருவரும் சேர்ந்து கோயம்புத்தூருக்கு கூட்டிச்செல்வார்கள். கல்யாணத்திற்கு முன்பே இவர் வெளியில் கூட்டிச்செல்வார் பேசுவதற்கு மொபைல் போன் வாங்கிக்கொடுத்தார்.

20. 20-06-2019-ல் எனக்கும் தயாளன் பிரபு என்பவருக்கும் கிறிஸ்துவ முறைப்படி ே ஹாலி ட்ரினிட்டி சர்ச் வால்பாறையில் திருமணம் நடந்தது என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் திருமண சான்றிதழ் அதுதானா என்றால் சரிதான். **அந்த திருமண சான்றிதழ் நகல் எ.சா.ஆ.2 ஆகும்.**

21. தற்போது என்னிடம் காட்டப்படும் போட்டோ நானும், தயாளன் பிரபு என்பவரும் சேர்ந்து எடுத்துக்கொண்ட போட்டோ என்றால் சரிதான். **அந்த போட்டோ எ.சா.ஆ.3 ஆகும்**. தற்போது என்னிடம் காட்டப்படும் போட்டோ நானும், தயாளன் பிரபு என்பவரும் சேர்ந்து 2018-ல் இருவரும் டெல்லிக்கு சுற்றுலா சென்றபோது எடுத்துக்கொண்ட போட்டோ என்றால் சரிதான். அந்த போட்டோ 2018-ல் எடுக்கவில்லை. 2011-ல் திருமணம் செய்த சமயத்தில் அந்த போட்டோ எடுத்தது. **அந்த போட்டோ எ.சா.ஆ.4 ஆகும்.**

22. தற்போது தயாளன்பிரபு எங்கே வேலை பார்க்கிறார் என்றால் தெரியவில்லை. அவர் பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருகிறார் என்றால் நான் திருமணம் செய்தபோது அவர் பள்ளியில் தான் வேலை பார்த்தார். அவர் தற்போது சி.எஸ்.ஐ மேல்நிலைப்பள்ளி திருச்சியில் வேலை பார்க்கிறார் என்றால் இப்போது எனக்கு தெரியாது.

23. தற்பொழுதும் நான் தயாளன் பிரபு என்பவருடன் தொடர்பில் உள்ளேன். அவருடன் செல்போனில் பேசிக்கொண்டு இருக்கிறேன் என்றால் இல்லை. 15 நாளுக்கு ஒரு முறை நான் திருச்சி சென்று அவருடன் குடும்பம் நடத்திக்கொண்டும் அவருடைய சம்பள பணத்தை வாங்கிக்கொண்டு வருகிறேன் என்றால் அவரை நான் பிரிந்தே 8 வருடங்கள் ஆகிறது.

24. அவருடன் நடந்த திருமணத்தை ரத்து செய்து ஏதாவது உத்தரவு வாங்கியுள்ளேனா என்றால் வாங்கியுள்ளேன். அதை இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்யமுடியும். கோயம்புத்தூர் குடும்ப நல நீதிமன்றத்தில் அந்த உத்தரவு வாங்கினேன். அந்த உத்தரவு நகலை என்னுடைய மனுவில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

25. எனக்கும் தயாளன்பிரபு என்பவருக்கும் இடையே நடைபெற்ற திருமணம் விவாகரத்து ஆகிவிட்டது என்ற விபரத்தை என்னுடைய மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் நான் மனுவில் பிரிந்து வாழ்ந்துகொண்டிருக்கிற விவரத்தைமட்டும் சொல்லியுள்ளேன். விவாகரத்து வாங்கவில்லை என்ற விவரமும் 1-ம் எதிர்மனுதாரருக்கு தெரியும். எல்லாமே தெரிந்துதான் சரி பரவாயில்லை. அவருடைய அக்கா முறையில் ஜிஜிலா மேரி என்பவரும்

கணவரை பிரிந்து விவாகரத்து வாங்கியுள்ளார் நானும் கணவரை பிரிந்துள்ளதால் அக்காமாதிரி தான் நீயும் அதனால் ஒரு பொண்ணுக்கு லைப் கொடுத்தமாறி இருக்கும் அப்படினுசொல்லிதான் கல்யாணத்தைப்பற்றி பேசினார்கள்.

26. தயாளன் பிரபு என்பவருடன் நடந்த முதல் திருமணத்தை மறைத்து ஏமாற்றி 1-வது எதிர்மனுதாரரை 2-வதாக திருமணம் செய்துகொண்டேன் என்றால் எல்லாமே அவருக்கு தெரியும். தெரிந்துதான் கல்யாணம் பன்னுவதற்கு ஒத்துக்கொண்டார். நான் கணவரை பிரிந்து எவ்வளவு காலம் வாழ்கிறேன் என்பது அவருக்கு தெரியும்.

27. 1-வது எதிர்மனுதாரருக்கு முதல் திருமணம் நடைபெற்றதையோ விவாகரத்து பெற்றதையோ மறைத்து ஏமாற்றி 1-வது எதிர்மனுதாரரை திருமணம் செய்துகொண்டேன் என்றால் அவருக்கு எல்லாமே தெரியும். 1-வது எதிர்மனுதாரருடன் நடந்த திருமணத்தை பதிவு செய்யசொல்லி கிராம நிர்வாக அலுவலருக்கு மனு கொடுத்தேனா என்றால் மனு முன்னாடி கொடுக்கவில்லை கல்யாணம் எல்லாம் முடிந்தபிறகு 1-ம் எதிர்மனுதாரர் என்னை அடிச்சு வீட்டுக்கு அனுப்பிவிட்டார். அதன்பிறகு 1-ம் எதிர்மனுதாரர் எல்லா ஆவணங்களையும் சேகரித்தார். கிராம நிர்வாக அலுவலர் என் வீட்டிற்கு வந்து இந்த மனு முதலில் வாங்கவில்லை. இப்போது எழுதிக்கொடு என்று மிரட்டி என்னிடம் வாங்கிச்சென்றார்.

28. கிராம நிர்வாக அலுவலர் மிரட்டி வாங்கிச்சென்றதாக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என் அம்மா, அப்பாவின் கையெழுத்து என்றால் சரிதான். அது எனது பெற்றோர் வாங்கிய ஆவணம் தான் எனறால் சரிதான். அந்த கிராம நிர்வாக அலுவலர் எனக்கு கொடுத்த கடிதம் எ.சா.ஆ.5.

29.முதல் திருமணத்தை மறைத்து 2-ம் திருமணத்தை செய்ததற்காக என் மீது பொள்ளாச்சி அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் செய்து அதில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கு நான் 1-ம் எதிர்மனுதாரருடன் வீட்டை விட்டு வெளியேறிஇந்த நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தபிறகு அதாவது டிசம்பர் மாதத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

30. 1-ம் எதிர்மனுதாரர் மற்றும் எனக்கும் இடையே நடந்த திருமணத்தை இல்லாநிலையது என அறிவிக்ககோரி பொள்ளாச்சி உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ளதா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

31. என்னுடைய மருத்துவ அறிக்கையை பார்த்து 19-05-2020-ல் குழந்தை பிறந்துவிடும் என்பதை தெரிந்து 1-ம் எதிர்மனுதாரர் எங்களிடம் கேள்வி எழுப்பினார் என்றும், நான் அவருடன் சண்டைபோட்டுக்கொண்டு 17-09-2019-ல் என்னுடைய அம்மாவீட்டிற்கு போய்விட்டேன் என்றால் இல்லை. அதுமாறி எதுவும் நடக்கவில்லை.

32. 17-09-2019-ல் என் தாய் வீட்டிற்கு செல்லும் போது நான் அணிந்திருந்த நகைகள் மற்றும் திருமணத்தின் போது கொடுத்த சீர் வரிசைகள் அனைத்தையும் என்னுடன் என் தாய் வீட்டிற்கு எடுத்துச்சென்றேன் என்றால் சரியல்ல அந்த வீட்டில் இருந்து எதையும் எடுத்துவரவில்லை.

33. 17-09-2019-ல் போகும்போது எடுத்துப்போய்விட்டு தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் என்மீது கொடுத்த புகாரின் அடிப்படையில்

பதிவுசெய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை தான் தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணமா என்றால் சரிதான் அந்த முதல் தகவல் அறிக்கை நகல் எ.சா.ஆ.6.

34. தற்போது என்னிடம் காட்டப்படும் ஆவணம் கிராம நிர்வாக அலுவலருக்கு நான் எழுதிய கடிதமா என்றால் சரிதான். அந்த கடிதம் எ.சா.ஆ.7 ஆகும். அந்த கடிதத்திலுள்ள விவரங்களை 1-ம் எதிர்மனுதாரர் சொல்ல சொல்ல நான் எழுதினேன். அதில் இது தான் முதல் திருமணம் என்று எழுதப்பட்டுள்ளதா என்றால் சரிதான். அவர் சொன்னார் நான் எழுதினேன். எ.சா.ஆ. 5 ஆவணம் கிராம நிர்வாக அலுவலர் என்னை மிரட்டி எழுதி வாங்கினார் என்று சொல்லும் நிலையில் அது சம்பந்தமாக அவருடைய உயர் அதிகாரிகளுக்கோ அல்லது காவல் நிலையத்தில் புகார் ஏதாவது கொடுத்தேனா என்றால் இல்லை. அந்த சமயத்தில் என் சித்தப்பா இறந்திருந்தார். அப்போது வந்து கேட்டதால் எனது அப்பா அம்மாவிடம் வாங்கி சென்றார். என்னிடம் கையெழுத்து எதுவும் வாங்கவில்லை.

35. வி.ஏ.ஓ வரும் பொழுது நான் வீட்டில் இருந்தேனா என்றால் இருந்தேன். ஆனால் வி.ஏ.ஓ-வை பார்க்கவில்லை. அம்மா அப்பாவை போன் மூலம் கூப்பிட்டுள்ளார். வி.ஏ.ஓ நான் சொல்லுவது போல் எனது பெற்றோரிடமே, என்னிடமோ கையெழுத்து எதுவும் வாங்கவில்லை என்றால் சரியல்ல. நான் கொடுத்த மனுவை வி.ஏ.ஓ தீர விசாரித்து தான் எ.சா.ஆ.5-ஐ வழங்கியுள்ளார் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

36. என்னுடைய மனுவில் பத்தி 3, 4-ல் ஜிஜிலா மேரி சொன்னதால் தான் திருமணத்திற்கு சம்மதித்தேன் என்றும், 50 பவுன் நகையுடம் வேறு பெண் பார்த்து வைத்திருந்தேன். ஜிஜிலா மேரி சொன்னதால் தான் நான் உன்னை திருமணம் செய்தேன் என்று சொல்லுவது முற்றிலும் பொய். இந்த வழக்கிற்காக ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்றால் சரியல்ல.

37. கல்யாணம் ஆன 7-வது நாளிலேயே 1-வது மனுதாரர் 25 பவுன் நகையை வாங்கிவரச் சொன்னதாக மனுவில் கூறப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் ஜோடிக்கப்பட்ட பொய் என்றால் சரியல்ல. மனுவில் 4-வது பத்தியில் 1 வது எதிர்மனுதாரர் தொழிலில் அதிக முதலீடு செய்யவேண்டும் என்று சொல்லி என்னுடைய 25 பவுன் நகையை வாங்கிக்கொண்டு ஒரு மாதத்தில் திருப்பித்தருவதாக பொய்யாக சொல்லுகிறேன் என்று சொன்னால் சரியல்ல.

38. என்னுடைய திருமணத்தின் போது 1-ம் எதிர்மனுதாரர் ஜிஜிலாமேரியின் கடையில் வேலை பார்த்து வந்தார் என்றால் சரிதான். இருவரும் பிஸ்னஸ் பார்ட்னர் என்று சொன்னார். பிஸ்னஸ் பார்ட்னர் என்பதற்கான ஆவணங்களை பார்த்தேனா என்றால் இல்லை. அவருடைய வார்த்தைகளை நம்பித்தான் சொல்லுகிறேன். என்னுடைய மனுவில் 5-வது பத்தியில் சொல்லியுள்ளது போல் ஜிஜிலா மேரி 1-வது எதிர்மனுதாரர் எல்லோருமே ஸ்ஸோன் ேஹாட்டலுக்கு போய் மது அருந்தும் இடத்தில் அமர்ந்திருந்தார்கள் என்று சொல்லியுள்ள சங்கதி பொய் என்று சொன்னால் உண்மை. இவர்கள் இருவரும் என்னையும் அழைத்துச் சென்றார்கள்.

39. ஸ்ஸோன் ேஹாட்டலுக்கு மதிய உணவு சாப்பிடத்தான் சென்றார்கள் என்றால் சரிதான். மதிய உணவு சாப்பிட்டுவிட்டு அதனுடன் இணைந்து பின்னால் உள்ள மது கூடத்திற்கு சென்றார்கள் நானும் சென்றேன். நான் மனுவில் சொல்லியுள்ளவாரு ஜிஜிலா மேரியுடன் தொழில் ரீதியான பங்கு தாரர் இல்லை என்றால் பங்குதாரர் என்று சொல்லிதான் கல்யாணம் பண்ணினார்.

40. 1-வது எதிர்மனுதாரர் வேலை நிமித்தமாக ஜிஜிலா மேரியுடன் வெளியூர் செல்வது வழக்கம் என்றால் அடிக்கடி இல்லை எப்போதும் ஒன்றாகத்தான் இருப்பார்கள். நான் சொல்லுவது போல் ஜிஜிலா மேரியுடன் 1-வது எதிர்மனுதாரருடன் எந்த கள்ள உறவு இல்லை என்றும் தொழிலாளி-முதலாளி உறவு மட்டுமே உள்ளது என்றால் அது பொய்.

41. குமார் என்று ஒரு அண்ணன் உள்ளாரா என்றால் இல்லை. ஆனால் தூரத்து உறவுக்காரர் என்ற வகையில் குமார் ஒருவர் உள்ளார். குமார் என்பவர் என் அம்மாவின் முதல் கணவரின் மகன் என்றால் அப்படி எந்த ஒரு சம்பவமும் இல்லை. நான் மனுவில் சொல்லியுள்ளவாறு ஜிஜிலா மேரியுடன் பெங்களூரில் இரண்டு நாட்கள் தாங்கியிருந்தார் என்று பொய்யாக சொல்லிகிறேன் என்றால் அது உண்மை. ஜிஜிலா மேரியின் தங்கை வீடு கோயம்புத்தூரில் உள்ளது. வார விடுமுறையில் சென்று விடுவார்கள்.

42. பெங்களூருக்கு எந்த தேதியில் சென்றார்கள் என்று மனுவில் குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. பொதுவாக சொல்லியுள்ளேன். கல்யாணம் முடிந்து 7-வது நாள் சென்றார்கள் தேதி ஞாபகம் இல்லை. என்னுடைய மனுவில் அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பின்னர் தனியார் மருத்துவமனையில் சிகிக்சை பெற்றதாக சொல்லியுள்ளேனே எந்த தனியார் மருத்துவர் மனை என்று கூறிப்பிட்டு சொல்லமுடியுமா என்றால் ஞாபகம் இல்லை.

43. என் மனுவில் சொல்லியுள்ள 1-வது எதிர்மனுதாரர் என்னை மிரட்டியும், கொடுமைபடுத்தியும் இரவில் குரல்வளையை பிடித்துக்கொண்டு கேள்வி கேட்டதாக ஜோடிக்கப்பட்ட சம்பவம் பொய் என்றும் அவ்வாறு ஒரு சம்பவம் நடைபெற்றிருந்தால் நீங்கள் காவல் நிலையத்தில் 1-வது எதிர்மனுதாரர் மற்றும் அவரது குடும்பத்தார் கொடுமைபடுத்தியதாக புகார் மனு கொடுத்திருப்பேன் என்றால் இல்லை. ஜிஜிலா மேரி உடன் இருந்தபோது நான் போய் கேட்டதால் என்னை அடித்துவிட்டார். நான் இது சம்பந்தமாக மகளிர் காவல் நிலையம் சென்று சொன்ன போது முதலில் மருத்துவமனை போய் சேருங்கள் என்று சொன்னார்கள். மருத்துவமனையிலிருந்து போலீசுக்கு தகவல் சொன்னார்கள். அதற்கு அப்பறம் புகார் ஏதும் கொடுக்கவில்லை. இந்த கோர்டில் மனு போட்டுள்ளேன்.

44. நான் சொல்லுவது போல் 1-வது எதிர்மனுதாரர் என்னை அடித்து தாக்கி நான் மருத்துவமனையில் சிகிச்சை பெற்றிருந்தால் அதை போலீசார் விசாரித்து வழக்கு பதிவு செய்திருப்பார்கள். நான் பொய்யாக சொல்லுகிறேன் என்றால் சரியல்ல. நான் அரசு மருத்துவமனையில் தன்னிச்சையாக தான் சிகிச்சைக்காக சேர்ந்தேன் என்றால் நான் காவல் நிலையம் சென்றுவிட்டு அதன் பிறகு தான் சிகிச்சைக்காக சேர்ந்தேன்.

45. நான் மருத்துவமனையில் சேரும் பொழுதே கருவுற்றது சம்பந்தமாக உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் அதன் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டதாகவும் ஏழு வார கரு இருந்ததாக விடுப்புச்சீட்டில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 1-ம் எதிர்மனுதாரர் என்னை அடித்ததால் எனக்கு தலையில் வெட்டு காயமும், இடுப்பில் அடியும் பட்டது. சிகிச்சைக்காக சேரும் பொழுது மருத்துவர்கள் நான் கருவுற்றிருப்பதை அறிந்து அதன் விவரங்களை கேட்டதின் பேரில் சொன்னேன்.

46. வெட்டுகாயம் ஏற்பட்டு இரத்தம் வடிந்து கொண்டு இருந்ததா என்றால் சரிதான். வெட்டுகாயம்

ஏற்பட்டு இரத்தம் வடிந்து கொண்டிருந்த நிலையில் தான் நான் பொள்ளாச்சி காவல் நிலையம் சென்றேனா என்றால் அந்த அளவுக்கு இரத்தம் இல்லை 3, 4 டிராப்ஸ் வந்தது. தலையில் ஏற்பட்ட வெட்டு காயத்திற்கு அரசு மருத்துவமனையில் சிகிச்சை அளித்தார்களா என்றால் சரிதான். என்னுடைய மனுவில் முதல் கணவர் திருமணமாகி 10 நாளில் காணாமல் போய்விட்டதாக சொல்லியுள்ளேனா என்றால் காணாமல் போனதாக தெரியவில்லை எங்கே போனார் என்று தெரியாது அடிக்கடி எங்களுக்குள் சண்டை வரும்.

47. மனுவில் எனக்கும் முதல் கணவருக்கும் இடையே அடிக்கடி சண்டை வரும் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. என்னுடைய முதல் கணவர் 8 வருடமாக அவர் இருக்குமிடம் தெரியாது என்று மனுவில் சொல்லியுள்ளேனா என்றால் சரிதான். 8 வருடம் அவர் காணாமல் போனதை நான் பல ஊர்களில் தேடிப்பார்த்தேனா என்றால் நான் எங்கும் தேடவில்லை. 2014-ல் நாங்கள் இருவரும் வழக்கு தாக்கல் செய்தோம். அப்போது அவரை பார்த்தேன்.

48. 8 வருடமாக என் முதல் கணவரை காணவில்லை கண்டுபிடித்து தருமாறு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேனா என்றால் இல்லை. என்னுடைய புகார் மனுவில் முதல் கணவருடன் விவாகரத்து பெறுவதற்கு கோவை நீதிமன்றத்தில் சந்தித்தோம் என்று சொல்லியுள்ளேனா என்றால் இல்லை. மனுவில் பத்தி 6 முதல் 8-ல் சொல்லப்பட்டுள்ள சங்கதிகள் அனைத்தும் ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல.

49. மனுவில் பத்தி 10-ல் சொல்லப்பட்ட சங்கதிகள் அனைத்தும் ஜோடிக்கப்பட்ட சங்கதிகள் என்று சொன்னால் சரியல்ல. கரு ஏற்பட்டதை தனியார் மருத்துவமனைக்கு கருக்கலைப்பு செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. 1-ம் எதிர்மனுதாரர் என்னை இடுப்பில் எட்டி உதைத்ததால் அரசு மருத்துவமனையிலிருந்து விடுவிக்கப்பட்ட பிறகு இரத்தப்போக்கு ஏற்பட்டது. மனுவில் சொல்லியுள்ளவாரு 1, 3, 4 எதிர்மனுதாரர் எந்தவிதமான வரதட்சனை கொடுமை கேட்டு அடித்ததாகவோ, நகை பிடுங்கி வைத்தல் போன்ற சம்பவத்தில் ஈடுபடவில்லை என்றால் சரியல்ல.

50. பள்ளிச்சான்றிதழ், நகை கேட்டு மனு ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. இந்த வழக்கு விசாரணையில் கேட்கலாம் என்று இருந்துவிட்டேன். 1-வது எதிர்மனுதாரர் என்னுடைய பள்ளிச்சான்றிதழை பிடுங்கி வைத்துவிட்டார் என்று நீதிமன்றத்தில் தற்போது தான் முதன் முதலில் சொல்கிறேன் என்றால் சரிதான். திருமணமே செல்லாத திருமணம் என்பதால் நான் குடும்ப வன்முறை சட்டத்தின்படி பரிகாரம் கோர எந்த முகாந்திரம் இல்லை என்றால் சரியல்ல.

51. நான் புகாரில் சொல்லியுள்ள சங்கதிகள் அனைத்தும் பொய். இந்த மனு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல. நான் கிறிஸ்துவ மதத்தை சார்ந்தவர். எந்த சூழ்நிலையிலும் இந்துவாக மாறவில்லை என்றும். மாறியதாக உண்மைகளை மறைத்து 1-வது எதிர்மனுதாரரை திருமணம் செய்துவிட்டேன் என்றால் பொய். நான் திருமணம் முடிந்து 4, 5 நாட்கள் தான் 1-வது எதிர்மனுதாரருடன் குடும்பம் நடத்தினேன் என்றால் இல்லை.

52. எதிர்மனுதாரரிடமிருந்து பணத்தை பறிக்க வேண்டும் என்ற நோக்கத்துடன் பொய்யான சங்கதிகளுடன் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்)திரு.ரெ,செந்தில்குமார்
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை